# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**காமதேனு பல்பொருள் அங்காடி கட்டிட முதல் தளம், 378 அண்ணா சாலை,** தேனாம்பேட்டை, சென்னை–18.
தொலைபேசி 24357580

**வழக்கு எண். 24213 / விசாரணை / 2009**

**விசாரணை நாள் 27 /01/ 2010**

| | |
|---|---|
| முன்னிலை | திரு.ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு)<br>மாநில தகவல் ஆணையர். |
| | திரு. து.இரா.இராமசாமி, இ.ஆ.ப., (ஓய்வு)<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | **திரு. சி. ஏசுதாஸ்<br>த/பெ. (லேட்) செல்லையா,<br>பெருந்தலைக்காடு, அழகியபாண்டியபுரம் அஞ்சல்<br>கன்னியாகுமரி மாவட்டம் – 629 851.** |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்,<br>**தலைமைப் பொறியாளர் (பொது)<br>நெடுஞ்சாலைத் துறை<br>சேப்பாக்கம், சென்னை – 600 005.** |

* * * * * * * * *

1. மனுதாரர் தனது 26/09/2009 தேதியிட்ட மேல் முறையீட்டு மனுவில் தான் கோரிய தகவல்கள் முறையாக வழங்கப்படவில்லையென்றும் அவ்வாறு தகவல்கள் முறையாக வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியுள்ளார்.

2. மனுதாரர் 10/07/2009 தேதியன்று ஒரு சில தகவல்களைக் கோரி தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, அவர்களுக்கு மனு செய்துள்ளார். அம்மனு அதே தேதியன்று கோட்டப் பொறியாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டு மனுதாரருக்கும் தகவல் அனுப்பி உரிய தகவல்கள் கோட்டப் பொறியாளர், நாகர்கோவில், அவர்கள் அனுப்பிவைப்பார்கள் என்ற விவரம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. 29/07/2009 தேதியிட்ட கடிதத்தின் மூலமாகக் கோட்டப் பொறியாளர் தகவல்கள் வழங்கியுள்ளார். அதில் கேள்வி எண். 1 முதல் 5 வரைக்கும் வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும், சரியானதாகவும் இருக்கின்றன. கேள்வி எண்.6 மற்றும் 7 ஆகியவற்றிற்கு சரியான தகவல்கள் வழங்கப்படவில்லை. **குமரி மாவட்டத்தில் செயல்படுத்த இருக்கின்ற**

**திட்டங்களைப் பற்றியும், சாலைகள் விரிவுபடுத்துவது சம்பந்தமாகவும் தகவல்கள் வழங்கப்படாத நிலையில், கோட்டப் பொறியாளர், நாகர்கோவில், அவர்கள் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள் மேற்சொன்ன தகவல்களை மனுதாரருக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.**

3. மனுதாரர் கோரியுள்ள வழக்கு சம்பந்தமான தகவல்கள் 02/04/2008 அன்று தலைமைப் பொறியாளர், நாகர்கோவில், அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளது. 19/05/2008 அன்று பொதுத் தகவல் அலுவலர், கோட்டப் பொறியாளர் அலுவலகம், அவர்களும் வழக்கு குறித்து தகவல்கள் அனுப்பியுள்ளார். மேற்சொன்ன 2 தகவல்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பதால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி எது சரியான தகவல் என்று கேட்பதற்கு பதிலாக வேறு விதமாகக் கேள்விகள் தொடுத்துள்ளார். **மனுதாரர் நேர்மையான முறையில் முரண்பாடுகளை சுட்டிக்காட்டி தகவல்கள் கேட்டிருப்பாரேயானால், பொது அதிகார அமைப்பிற்கும், மனுதாரருக்கும் கால விரயமும், பொருள் விரயமும் ஏற்பட்டிருக்காது என்று இவ்வாணையம் கருதுகிறது.**

தமிழ்நாடு தகவல் ஆணையம்

ஒப்புதல் அளிக்கப்பட்ட தேதி 01 / 02 /2010
ஆணையத்தின் ஆணைப்படி

(சு.மோகனதாஸ்)
உதவி பதிவாளர்

வழக்கு எண். 24213/09
**திரு. சி. ஏசுதாஸ்**
**த/பெ. (லேட்) செல்லையா,**
**பெருந்தலைக்காடு, அழகியபாண்டியபுரம் அஞ்சல்**
**கன்னியாகுமரி மாவட்டம் – 629 851.**

வழக்கு எண். 24213/09
**பொதுத் தகவல் அலுவலர்,**
**தலைமைப் பொறியாளர் (பொது)**
**நெடுஞ்சாலைத் துறை**
**சேப்பாக்கம், சென்னை – 600 005.**

வழக்கு எண். 24213/09
**கோட்டப் பொறியாளர்**
**நெடுஞ்சாலை**
**நாகர்கோவில்.**